Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள்: 04

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஷூ ஆனி மீ 10 ஆம் உ ஞாயிற்றுக்கிழமை (24 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 30 ஓசை 126

## காங்கேசனில் அரிசி, மா; ஆனால் கைக்கெட்டாமல் படை தடுப்பு!

(யாழ்ப்பாணம்)

தற்போது இடம்பெறும் யுத்த நடவடிக்கைகள் காரணமாக மக்களுக்கு உணவுப் பொருள்களை எடுத்து வழங்க இயலாதிருப்பதை அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இதற்கு உடனடி பரிகாரம் காணவேண்டுமென்று அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. சிவமகாராசா யாழ். அரச அதிபருக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: ''யுத்த நடவடிக்கைகள் காரணமாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருப்பதால் அரிசி, சீனி, மா, பால்மா, மண்ணெண்ணை, டீசல், பெற்றோல் போன்ற பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. (4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் எங்களோடு இணைந்து போராட முன்வர வேண்டும்

### உரும்பராயில் மகேந்திரராசா (மாத்தயா)

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் எம்மைப் பாதுகாப்பார்களா? அச்சமின்றி வாழ முடியுமா? என்று கேட்கிறார்கள். நாம் ஓடமாட்டோம்; மக்களும் தமது பாதுகாப்பை தாமே ஏற்படுத்த வேண்டும். இளைஞர், மாணவர்கள், யுவதிகள் எம்மோடு இணைந்து பங்களிக்க வேண்டும். அப்போது தான் தமிழினம் விடுதலை பெற முடியும்,

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் கோ, மகேந்திரராசா (மாத்தயா) நேற்று மாலை உரும்பராயில் அன்னைபூபதி கலையரங்க திறப்பு விழா வைபவத்தில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்கி மரணம்

பலாலி வடக்கைச் சேர்ந்த குடும்பஸ்தரான மரியதுரை மரியசீலன் (வயது 26) என்பவர் தற்போது பலாலிப் பகுதியில் நடைபெற்றுவரும் ஷெல் தாக்குதலால் இடம் பெயர்ந்து வல்வையில் வசித்து வந்தார். தனது வீடு உடைமைகளைப் பார்வையிட நேற்று முன்தினம் சென்ற போது வளலாய் பகுதியில் பலாலி இராணுவ முகாமில் இருந்து வந்த ஷெல்தாக்குதலால் தாக்கப்பட்டு மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மரணமானார்.

## "நாடு பிரியும்வரை போராட்டம் ஒழியாது"

-யோகி

(யாழ்ப்பாணம்)

''போராட்டம் எத்தனையோ மாற்றங்களைக் கண்டிருக்கிறது. மன மாற்றங்களையும் கண்டிருக்கிறது. நாடு பிரியும் வரையும் எந்தக் கால கட்டத்திலும் போராட்டம் ஒழியாது. பேச்சுவார்த்தைகள் ஒரு தீர்வில்லை.'' இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் யோகரத்தினம் யோகி நேற்று மாலை உரும்பராயில் நடைபெற்ற (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு இன்னமும் புலிகள் கட்டுப்பாட்டில்!

(புதுடில்லி)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளை விரட்டியடித்து சிறிலங்கா இராணுவம் அதனைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்து விட்டதாக சிறிலங்கா அரசு கூறிய போதிலும் கிழக்கு மாகாணத்தின் முக்கிய பகுதிகள் இன்னமும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் தான் இருப்பதாக ஏஜன்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன என்று இந்திய வானொலி நேற்று நண்பகல் செய்தியில் தெரிவித்தது.

இதற்கு ஆதாரமாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனத்தை இந்திய வானொலி எடுத்துக் கூறியது.

## உலக உதவி தமிழருக்கு நேரகக் கிடைக்கட்டும்!

## சிங்கள அரசுமூலம்கிடைக்காது; விடுதலைப் புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தினாலும், சிங்களக் காடையர்களினாலும் படுமோசமான தாக்குதலுக்குள்ளாகியுள்ள தமிழீழ மக்களுக்கு உலக நாடுகளும், சர்வதேச மனித நேய ஸ்தாபனங்களும் மருத்துவ, உணவு உதவிகளை நேரடியாக உதவ முன்வர வேண்டும்என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் தலைமைச் செயற்குழு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

கடந்த பதின்மூன்று நாட் ... கொழும்பு, மலையகம், தமி ... தும் எல்லோரும் அறிந்த

## பீரங்கித் தாக்குதல்

(கட்டைபறிச்சான்)

கட்டை பறிச்சான் கிராமத்தை நோக்கி கடற்படைக் கப்பல்கள் பீரங்கித் தாக்குதலை நேற்றுமுன்தினம் மேற்கொண்டன. இதனால் அக்கிராமத்தைச்சேர்ந்த இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர்.

அதேவேளை நேற்று கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலினால் கடற்கரைச்சேனை என்னும் இடத்தில் ஆறு வயதுச் சிறுவன்ஒருவன் பலியானான்.

## உலகநாடுகள் உதவியை சிறிலங்கா அரசு கேட்கிறது

இலங்கையின் வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிப் போராளிகளுடன் கடந்தசில தினங்களாக நடந்து வரும் போரில் சர்வதேச சமூகத்திடமிருந்து சிறிலங்கா அரசு உதவி கோரியுள்ளது. நேச நாடுகளிடமிருந்து பொருளாதார உதவியும் தார்மீக ஆதரவும் சிறிலங்காவுக்கு கிடைக்குமென்று அரசு எதிர்பார்ப்பதாக அரச உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## சம்மாந்துறையில் முப்பது தமிழ் முஸ்லிம் கொலை

(சம்மாந்துறை)

சம்மாந்துறைப் பகுதியில் முப்பது தமிழ் முஸ்லிம் மக்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

ஜே.வி.பியினருக்கு தெற்கில் செய்ததுபோல் மூன்று பொது மக்களை டயர் போட்டு உயிருடன் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

மேலும் இதே இடத்தில் உள்ள பல வீடுகளில் நகை, பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

## வடக்கு கிழக்குப் பகுதிகளில் இரண்டு லட்சம் அகதிகள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுமார் இரண்டுலட்சம் தமிழ் முஸ்லிம் மக்கள் அகதிகளாகபாடசாலைக் கட்டிடங்களிலும் ஆலயங்களிலும் ... மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் எண்பதாயிரம் மக்கள் தமது வீடுவாசல்களை இழந்து அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். வடக்கு மாகாணத்தில் அகதிகளின் சரியான

## யுத்தத்தின்மத்தியிலும் கலைகள் பாதுகாக்கப்படவேண்டும்

## சிறிலங்கா அரசு கேட்கிறது

இலங்கையின் வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிப் போராளிகளுடன் கடந்த சில தினங்களாக நடந்து வரும் போரில் சர்வதேச சமூகத்திடமிருந்து சிறிலங்கா அரசு உதவி கோரியுள்ளது. நேச நாடுகளிடமிருந்து பொருளாதார உதவியும் தார்மீக ஆதரவும் சிறிலங்காவுக்கு கிடைக்குமென்று அரசு எதிர்பார்ப்பதாக அரச உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு கிழக்குப் பகுதிகளில் இரண்டு லட்சம் அகதிகள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுமார் இரண்டுலட்சம் தமிழ் முஸ்லிம் மக்கள் அகதிகளாக பாடசாலைக் கட்டிடங்களிலும் ஆலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் எண்பதாயிரம் மக்கள் தமது வீடுவாசல்களை இழந்து அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். வடக்கு மாகாணத்தில் அகதிகளின் சரியான

(4ஆம் பக்கம் பார்க்க)

## முப்பத்தி ஐந்து சடலங்கள் புலிகளால் தகனம்

(திருக்கோணமலை)

திருமலை மாவட்டத்தில் மூன்றாம் கட்டை, ஆறாம் கட்டை, சாம்பல்தீவு ஆகிய இடங்களில் ஸ்ரீலங்காஇராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட முப்பத்திஐந்து பொதுமக்களின் சடலங்கள் விடுதலைப் புலிகளால் நேற்றுத் தகனம் செய்யப்பட்டது.

அதேவேளை இப்பகுதியில் பொம்பர், ஹெலித்தாக்குதலினாலும் இராணுவ முகாம்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினாலும் நாற்பத்தைந்து பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். இவர்களுக்குப் போதிய வைத்திய வசதிகள் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

## பொம்பர் தாக்கிக் குழந்தை, புலிகள்உறுப்பினர் மரணம்

(செம்மலை)

செம்மலையில் விடுதலைப் புலிகளின் வாகனம் ஒன்று வீதியில் சென்றுகொண்டிருக்கும்போது அதன்மீது சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான நான்கு பொம்பர்கள் குண்டுகளை வீசித் தாக்கின. வாகனத்திலிருந்த விடுதலைப் புலிகள் குதித்து பாதுகாப்புத் தேடிக்கொண்டபோதும் ஷெல் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். ஒருவர் காயமடைந்தார்.

அதேவேளை சம்பவம் நடைபெற்ற வீட்டில் இருந்த குழந்தை ஒன்றும் மரணம் அடைந்தது. மரணமடைந்த அகஸ்டின் என்பவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## சிங்கள அரசுமூலம்கிடைக்காது; விடுதலைப் புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தினாலும், சிங்களக் காடையர்களினாலும் படுமோசமான தாக்குதலுக்குள்ளாகியுள்ள தமிழீழ மக்களுக்கு உலக நாடுகளும், சர்வதேச மனித நேய ஸ்தாபனங்களும் மருத்துவ, உணவு உதவிகளை நேரடியாக உதவ முன்வர வேண்டும்என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் தலைமைச் செயற்குழு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

கடந்த பதின்மூன்று நாட்களாக நடக்கும் தமிழீழ சிறிலங்காப் போரில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் மக்கள் அகதிகள் ஆகியுள்ளனர்.

2000க்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் சிங்களப் படையாலும், சிங்களக் காடையராலும் கொல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பு, மலையகம், தமிழீழம் ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்டோரின் நிலை என்ன என்பது யாருக்கும் தெரியாது.

ஜே. வி. பி. போராளிகள் எனக் கூறிக்கொண்டு சிங்களப் பொதுமக்களை சிங்கள அரசு கொலை செய்ததும், உயிரோடு ரயர்போட்டு எரித்ததும் எல்லோரும் அறிந்த உண்மை.

அதேபோல் இன்று பல தமிழ் முஸ்லிம் இளைஞர்கள், இளம் பெண்கள் கொல்லப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கொலை

(கொழும்பு)

கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சுமார் 2500 தமிழ் அப்பாவி இளைஞர்களில் 100க்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லையாம். அவர்கள் அடித்தும், சுட்டும் கொல்லப்பட்டதாக விடுதலை பெற்று வந்த இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் நிலையங்களில் இவ்விளைஞர்களின் உறவினர் சிலர் விசாரித்தபோது, பாதுகாப்புப் படையினர் தமக்கு இவர்கள் பற்றி எது விதமான தகவல்களையும் தரவில்லை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபர் பட்டப்பகலில் வெட்டிக் கொலை!

(விசேட நிருபர்)

யாழ்-இரண்டாம் குறுக்கு வீதியில் ஒருவர் பட்டப் பகலில் மர்மமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (22ஆம் திகதி) வெள்ளிக்கிழமை நண்பகலுக்கு முன்பாக நடைபெற்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: நீண்ட நாட்களாக அறையொன்றில் தனியாக வாழ்ந்த அவர் சம்பவ தினத்தன்று காலையில் காணப்பட்டதாக கூறப்பட்டது.

அவர் தங்கி இருந்த வீட்டவர்களும், அயலவர்களும் யாழ்-கோட்டை ஷெல்லடி காரணமாக இடம் பெயர்ந்து போயிருந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

னால் கடற்கரைச்சேனை என்னும் இடத்தில் ஆறு வயதுச் சிறுவன்ஒருவன் பலியானான்.

## சம்மாந்துறையில் முப்பது தமிழ் முஸ்லிம் கொலை

(சம்மாந்துறை)

சம்மாந்துறைப் பகுதியில் முப்பது தமிழ் முஸ்லிம் மக்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர். ஜே.வி.பியினருக்கு தெற்கில் செய்ததுபோல் மூன்று பொது மக்களை ரயர் போட்டு உயிருடன் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

மேலும் இதே இடத்தில் உள்ள பல வீடுகளில் நகை, பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

## யுத்தத்தின்மத்தியிலும் கலைகள் பாதுகாக்கப்படவேண்டும்

- டொமினிக்

(விசேட நிருபர்)

''ஒரு தேசிய இனத்தின் முக்கியமான அம்சம் கலை, கலாசாரம். கலை, கலாசாரம் பேணப்படும் போதுதான் தனி இனமாகப் பிரிந்து போகின்ற சுயநிர்ணய உரிமை ஏற்படுகிறது''

நேற்று மாலை (23-6-90) உரும்பராயில் திறந்துவைக்கப்பட்ட அன்னை பூபதி கலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

திருமலை

## மூன்றாம் கட்டையில் கடும்சண்டை; பொம்பர், ஹெலித் தாக்குதல்கள்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மூன்றாம் கட்டை என்னும் இடத்தில் நேற்றும் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் இடையில் கடும்சண்டை நடைபெற்று வருகின்றது. பல நாட்களாக நடைபெறும் இச் சண்டையில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்குப் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது.

இதனால் நேற்று இப்பகுதியில் பொம்பர் தாக்குதலும், ஹெலித் தாக்குதலும் விடுதலைப் புலிகளின நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் விடுதலைப் புலிகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

### அதிர்ச்சியால் மரணம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் நேற்றுக் காலை நடைபெற்ற ஹெலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கேரதீவுத் துறையில் நேற்று ஹெலி சூடு!

(கைதடி)

கேரதீவு இறங்கு துறையில் நேற்றுக்காலை ஹெலி தாக்குதலை மேற்கொண்டது. பிரயாணிகள் வள்ளங்கள் மூலம் கேரதீவு இறங்குதுறையிலிருந்து அக்கரைக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் ஹெலி ஒன்று தாக்குதலை நடத்தியது. ஓட்டிகள் வள்ளங்களைப் பக்குவமாக கரைசேர்த்தனர். பயணத்தை மேற்கொள்ள கேரதீவுத் துறையில் நின்ற மக்கள் பாதுகாப்புத் தேடி நாலா பக்கமும் சிதறி ஓடினர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து வள்ளச் சேவைகள் உடன் நிறுத்தப் பட்டன. பாதையும் சேவையில் ஈடுபடுத்தப் படவில்லை.

# ஒன்பது நாள் போரில் 2 ஹெலி சேதம்; படகுடன் 20 கடற்படையினர் மரணம்

(கொழும்பு)

கடந்த ஒன்பது தினங்களாக விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்குமிடையில் நடந்து வரும் யுத்தத்தில் நேற்று முன்தினம் மாங்குளத்தில் இரண்டு ஹெலிக்கொப்ரர்கள் விடுதலைப் புலிப் போராளிகளால் சேதப்படுத்தப்பட்டன. வல்வெட்டித்துறைக் கடலில் கடற்படைப்படகொன்றை புலிகள் தாக்கியதில் அதிலிருந்த இருபது கடற்படையினரும் மாண்டுபோனார்கள்.

ஸ்ரீலங்காவின் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா மேற்கண்ட தகவல்களை நேற்று வெளியிட்டார். விடுதலைப் புலிப் போராளிகளின் போர்முறை பற்றியும் எடுத்துக்கூறிய ஜெனரல் ரணதுங்கா புலிகளின் கண்ணி வெடியால் துருப்புக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறினார்.

### 112 படையினர் பலி, 178 பேர் காயம் 158 பொலிஸ் மரணம்

கடந்த சில தினங்களாக ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் கொலை; பிரதமருடன் பேசி வருகிறேன்

- கருணாநிதி

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்தும், அவர்கள் அகதிகளாக்கப்படுவது குறித்தும் தாம் பிரதமர் வி. பி. சிங்குடன் விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருவதாக தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தற்பொழுது மண்டபம் அகதிமுகாமில் அகதிகள் மாத்திரமே தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறிய முதலமைச்சர் 1983 ஆம் ஆண்டிலிருந்து தமி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளி அவதி

(ஈச்சமோட்டை)

மண்ணெண்ணை விளக்கு பட்டு உடம்பு முழுவதும் தீ பற்றி எரிந்த காயங்களுடன் யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த குருநகர் பெண்மணி ஒருவர் தற்போது ஆஸ்பத்திரி மூடப்பட்டிருப்பதால் உறவினர்களால் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தில் அகதியாக அந்த நோயாளியை தங்கவைத்துள்ளனர். நிலைய உறுப்பினர்கள் மின்விசிறி, நுளம்பு வசதி போன்றவற்றை அந்த நோயாளிக்கு வழங்கியுள்ளனர். போதிய மருத்துவ வசதியின்மையால் அந்த நோயாளி அவதிப்படுகின்றார். (33)


## வரிவிளம்பரம்

இறைச்சிக் கோழி

விற்பனைக்கு

**V. K. M. FARM**

தரமான புறோயிலர்ஸ் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சில்லறை விலை 65/- தொடர்பு: 12, கனகசபை லேன், கே. கே. எஸ் றோட், (யாழ். இந்து கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம். (R-376)


# 2 மாதங்களுக்கு தேவையான உணவு கையிருப்பில்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியைப் பொறுத்தவரையில் எமது மக்களுக்கு வரும் ஓரிரு மாதங்களுக்கு தேவையான உணவு கையிருப்பில் உள்ளது.

ஆகவே உணவு தட்டுப்பாடு என்பது வெறும் வதந்தியே ஆகும் என்று யாழ் செயலக உதவி உணவு கட்டுப்பாட்டதிகாரி தெரிவித்துள்ளார்.

இருந்தும் கோதுமை மா இருப்பு சற்று குறைவாக உள்ளதென்றும் அதேவேளை அரிசியின் இருப்பு தாராளமாக இருப்பதாகவும் இதனால் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் என மக்கள் எவரும் அஞ்சத்தேவை இல்லை என்றும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (அ)

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள்

தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக சுகாதார சேவைகள் பற்றி ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்காக யாழ் மாவட்டத்திலுள்ள வைத்திய சாலை அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு இயக்க அதிகாரிகள் யாவரும் 1990ம் ஆண்டு யூன் மாதம் 25ம் திகதி (திங்கட்கிழமை) காலை 9 00 மணிக்கு இல. 73 கண்டி வீதி(சுண்டிக்குளி யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கக் கட்டிடத்தில் கட்டாயமாக சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

ந. கனகசபை

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,

யாழ்ப்பாணம்.

(B. 1192)

23-6-90


# புடைவை மின்தறி நிலையம்

❋ மின்தறியில் வேலைசெய்து அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் தேவை

❋ அனுபவமற்றவர்களுக்கும் வேதனத்துடன் பயிற்சி அளிக்கப்படும்

❋ தங்குமிட வசதிகள் உண்டு

நேரில் வரவும்

# லீனா ரெக்ஸ் இன்டஸ்ரி

(லங்கா) லிமிட்டெட்

புத்தூர்.

(B/1181)


## கோழித்தீன் விலை அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் கோழித்தீனின் விலை 100 ரூபாவால் உயர்ந்துள்ளது. முன்னர் 1 பைக்கற் கோழித்தீனின் விலை 197 ரூபா ஆகும். தற்போது 1 பைக்கற் விலை 300 ரூபாவாக உயர்ந்துள்ளது. கொழும்பிலிருந்து கோழித்தீன் வராததே இதற்கு காரணமாகும். இதனால் முட்டையின் விலையும் உயர்ந்துள்ளது. தற்போது 1 முட்டை விலை 3.50ஆகவிற்னையாவதும் குறிப்பிடத்தக்கது. (43)

## ஓமந்தையில் ஹெலி தாக்குதல்

(வவுனியா)

கடந்த புதன்கிழமை வவுனியா நகரப்பகுதியிலும், ஓமந்தையிலும் ஹெலிகொப்ரர்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதே தினம் வவுனியாவில் இராணுவ முகாமிலிருந்து ஷெல் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த இரு சம்பவங்களிலும் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய விபரம் தெரியவரவில்லை.

இதேசமயம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் வவுனியாவில் இருபதுக்குமேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. இதுபற்றிய சரியான விபரங்கள திரட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா நகரப்பகுதி செயலிழந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது, (தி)

## லொறிகள் திருப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து முந்திரிகைப்பழம், வெங்காயம் போன்றவற்றை ஏற்றிச் சென்ற சில லொறிகள் மதவாச்சியில் வைத்து திருப்பி

# A/L பௌதிக இரசாயனம்

# வெப்ப இரசாயனம்


## தொடர் -5

### சத்தீஸ்

(1) $N_2$ இன் தகனம்

$$N_2(g) + O_2(g) \rightarrow 2NO(g) \quad \Delta H_C = +180 \text{ KJ mol}^{-1}$$

வெப்ப உள்ளுறை வரைபு




இங்கு NO இன் தோன்றல்வெப்பம் $\Delta H_f$

$$\Delta H_f = \frac{\Delta HC}{2}$$

$$= + \frac{180}{2} = +90 \text{KJ mol}^{-1}$$

உதாரணம் 6

(1) எல்லாத் தகனத் தாக்கங்களும் வெப்பத்தை வெளிவிடும்போது $N_2$ இன் தகனம் வெப்பத்தை உள்ளெடுப்பது ஏன் என பிணைப்பின் அடிப்படையில் விளக்குக?

(2) NO(g) இன் தோன்றல் வெப்பம் என்ன?

விடை


(1) $N_2$ இல் $N \equiv N$ அணுக்களிடையே உள்ள வலிமையான பங்கீட்டுப் பிணைப்பை உடைக்கக் கூடிய சக்தி தேவை.

(2) $\Delta H_f \; [NO(g)] = \Delta HC/2 = + \frac{180}{2} = + 90 \text{ KJ mol}^{-1}$

(4) மெதேனின் தகனம்

$$CH_4(g) + 2O_2(g) \rightarrow CO_2(g) + 2H_2O(l) \quad \Delta H_C = -890 \text{ KJ mol}^{-1}$$

வெப்ப உள்ளுறை வரைபு




$$\Delta H_C = -966 - (-76)$$

$$= -890 \text{ KJ mol}^{-1}$$

(இவ்வரைபைக் கீறும்போது $CH_4$ இன் சக்தி பூச்சியம் அல்ல என்பதைக் கவனிக்கவும்)

### தகன வெப்பத்தின் உபயோகங்கள்

1. தோன்றல் வெப்பத்தை நேரடியாகத் துணிய முடியாத சேர்வைகளின் தோன்றல் [illegible] பயன்படுத்தப்படும்.

பயிற்சி அளிக்கப்படும்

தங்குமிட வசதிகள் உண்டு

நேரில் வரவும்

லீனா ரெக்ஸ் இன்டஸ்றி

(லங்கா) லிமிட்டெட்

புத்தூர்.

(B/1181)

வெளிநாடுகளிலும், கொழும்பிலும் உள்ள உங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக கடிதங்கள், புத்தகங்கள், பார்சல்கள், தஸ்தாவேஜுக்கள்

ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்

DHL WORLDWIDE EXPRESS

D. H. L. International Ltd.

C/o. Cosmos Marketing Services
331, Kasthuryar Road, Jaffna.

(B 965)

தரமிக்க உருக்கிலான தளபாடங்களுக்கு நாட வேண்டிய ஸ்தாபனம்

"ஜனார்த்தன்ஸ்" இணுவில்

தரமான உறுதிமிக்க நீடிய பாவனைக்குகந்த உருக்கினாலான அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், தட்டச்சு மேசைகள்

மற்றும்

காரியாலய வீட்டுத் தளபாடங்கள் அத்தனையும் அதி நவீன டிசைன்களில் என்றும் பெற்றுக் கொள்ள தாமதமின்றி நாடுங்கள்.

ஜனார்த்தன்ஸ் இன்டஸ்ரீஸ்

காங்கேசன்துறை வீதி,

இணுவில்.

(B/1011)

இத்தசமயம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் வவுனியாவில் இருபதுக்குமேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. இதுபற்றிய சரியான விபரங்கள திரட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா நகரப்பகுதி செயலிழந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது, (தி)

## லொறிகள் திருப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து முந்திரிகைப்பழம், வெங்காயம் போன்றவற்றை ஏற்றிச் சென்ற சில லொறிகள் மதவாச்சியில் வைத்து திருப்பி அனுப்பட்டன.

நேற்று முன் தினம் இவை மீண்டும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

அத்துடன் இனிமேல் இந்தப்பக்கம் வரக் கூடாது எனவும் லொறிச் சாரதிகள் எச்சரிக்கப்பட்டனராம்.

இதனால் கொழும்பில் கிலோ நூறு ரூபா விற்க வேண்டிய முந்திரிகைப்பழம் யாழ்ப்பாணத்தில் பதினைந்து ரூபா வரை விற்கிறது.

## மருந்து தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)


யாழ். போதனா வைத்தியசாலை மூடியதை அடுத்து தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளின் தொகையும் அதிகரித்து காணப்படுகிறது. சிறு காயங்களுக்கு உட்பட்டவர்கள்கூட அங்குசென்று வைத்தியம் பெற்று வருகின்றனர். சில டிஸ்பென்சறிகளில் மருந்துக்கு தட்டுப்பாடு நிலவியதை அடுத்து டாக்டர்கள் தங்கள் மருந்து செலவை கூடிய பணத்துக்கு நோயாளிகளிடம் அறவிடுகின்றனர். (43)

## அகதிகள் விபரம் திரட்டு

(ஈச்சமோட்டை)

குருநகர், நாவாந்துறை போன்ற இடங்களில் இருந்து அகதிகளாக கொழும்புத்துறையில் தங்கியிருப்போரை கொழும்புத்துறையில் உள்ள கிராம சேவையாளர்கள் அகதிகளின் பெயர் விவரங்களை திரட்டி வருகின்றனர். அண்மையில் யாழ். அரசாங்க அதிபர்அகதிகளின் விவரத்தை உடன் திரட்டுமாறு விடுத்த வேண்டுகோளை அடுத்து இவ்விபரம் கிராம சேவையாளர்களால் மும்மரமாக திரட்டப்படுகிறது. (43)

வெப்ப உள்ளுறை வரைபு




$\Delta H_C = -966 - (-76)$

$= -890 \text{ KJ mol}^{-1}$

(இவ்வரையைக் கீறும்போது $CH_4$ இன் சக்தி பூச்சியம் அல்ல என்பதைக் கவனிக்கவும்)

### தகன வெப்பத்தின் உபயோகங்கள்

1. தோன்றல் வெப்பத்தை நேரடியாகத் துணிய முடியாத சேர்வைகளின் தோன்றல் வெப்பங்களைத் துணிவதற்குத் தகன வெப்பத் தரவுகள் பயன்படுத்தப்படும். (கணிக்கும் முறை பின்னர் தரப்படும்)
2. குளுக்கோஸ், வெல்லம் போன்று உணவுகளின் கலோரிப் பெறுமானங்களைத் துணிதல்.
3. எண்ணெய்களின் கலோரிப் பெறுமானங்களைக் குறிப்பதற்குத் தகன வெப்பங்கள் பயன்டுத்தப்படும். இதிலிருந்து எண்ணெய்களை வகைப்படுத்தி, தரப்படுத்தி விலைகளும் தீர்மானிக்கப்படும்.


குறிப்பு

தகன வெப்பங்களைத் துணிவதற்கு குண்டுக் கலோரிமானி பயன்படுத்தப்படும்.

## எசுவின் வெப்பக் கூட்டல் விதி

ஒரு இரசாயனத் தாக்கத்தின் மொத்த வெப்ப மாற்றம் தாக்கிகள், விளைவுகள் என்பவற்றின் பௌதிக நிலையில் தங்கியுள்ளதே ஒழிய வேறு எந்த இடை நிலைச் சக்திப்படிகளிலும் தங்கியிருப்பதில்லை. அதாவது தாக்கத்தின் வெப்பமாற்றம் இடைநிலைப்படிகளிலோ, அல்லது தாக்கப்பாதையிலோ தங்கியிருப்பதில்லை.

எசுவின் விதிப்படி,




$$\Delta H = \Delta H_1 + \Delta H_2 = \Delta H_3 + \Delta H_4 + \Delta H_5$$

### எசுவின் விதியின் உபயோகங்கள்

அநேகமான வெப்ப உள்ளுறைகளைக் கணிப்பதற்கு எசுவின் விதி உபயோகமானது. தோன்றல் வெப்பங்கள், பிணைப்புச் சக்திகள், பதங்கமாதற் சக்திகள், அணு ஆதல்சக்தி, ாலகச்சக்தி போன்ற பல சக்திக் கணியங்களைத் துணியலாம்,

## மாநகரசபையின் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகராட்சிமன்றத்தில் கடமை புரியும் சகலதர ஊழியர்களும் நாளை 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழமைபோல் அலுவலகத்திற்கு வந்து கடமைக்குச் சமுகமளிக்குமாறு மாநகரசபை ஆணையாளரும் பொதுசன தொடர்பு அதிகாரி என். சகாதேவனும் வேண்டிக் கொண்டுள்ளனர். (லோ)

பழங்கள் தேவை

நன்றாக முற்றிப் பழுத்த மாம்பழம், விளாம் பழம், முந்திரிகைப்பழம் (திராட்சை) பப்பாசிப்பழம் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு

அர்ச்சயா பழத் தொழிற்சாலை

கிராமசபை அலுவலகம் முன்பாக,

கோப்பாய்.

(R. 377)

சிந்தனைக்கு

எழுமின்! விழிமின்! இலட்சியத்தை எய்தும் வரை ஓயாதீர்
- சுவாமி விவேகானந்தர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 24-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## முன்னெச்சரிக்கை இன்று அவசியம் தேவை

போர் நீடித்துக் கொண்டிருக்கிறது. பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா என்னதான் வீறாப்புப் பேசினாலும் வடக்கிலும் கிழக்கிலும் போர் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் புலிப்போராளிகளின் முகாம்கள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் புலிகள் காட்டுக்குள் ஓடிவிட்டதாகவும் அங்கு சகஜ நிலைமை திரும்பிக்கொண்டு இருப்பதாகவும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருக்கிறார்.

இதேசமயம் உணவுப் பொருள்களை வாகனங்களில் கிழக்குப் பகுதிகளுக்குக் கொண்டுபோக முடியாமல் விமானத்திலேயே கொண்டுபோய் இறக்கியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமல்ல என்று அமைச்சர் கூறினாலும் மக்கள் அழிந்துவிடுவார்கள் என்பதற்காக விமானத்திலிருந்து குண்டுவீசி அழிக்காமல் இருக்கின்றோம் என்று அமைச்சர் ரஞ்சன் கூறினாலும் பல்வேறு கோணத்தில் இனப்படுகொலை நிறைவேற்றப்படுகின்றது.

வடக்கிலும் கிழக்கிலும் விமானங்களும் ஹெலிக்கொப்ரர்களும் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் குண்டுகள் வீசித் தாக்கி வருகின்றன.

தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளை நோக்கி இராணுவ முகாம்களிலிருந்து கண்மூடித்தனமாக ஷெல் அடிக்கப்படுகிறது.

இதேபோல் ஹெலிக்கொப்ரர்களிலிருந்து கண்மூடித்தனமாக தமிழ் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகிறது.

இதே சமயம் தென்னிலங்கையிலும் மலையகப் பகுதியிலும் சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு எதிராக இனத்துவேஷத்தைக் கிளப்பிக் கலகத்தை மூட்டிவிட்டிருக்கிறார்கள்.

இனக்கலகம் பரவிக்கொண்டிருக்கிறது. சிங்களப் பேரினவாத அரச படைகளும் சிங்களப்பேரினவாதக் காடையர்களும் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்தும் தமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்தும் அட்டூழியம் செய்து வருகிறார்கள்.

இதே சமயம் ஒற்றுமையாக வாழும் தமிழ் முஸ்லிம் மக்களுக்குள்ளேயும் மோதலை ஏற்படுத்துவதற்கும் சிங்களப் பேரினவாத அரசு பிரசாரம் செய்து வருகிறது.

இனக்கலகம்பற்றிய செய்திகளை சிறிலங்கா சிங்களப் பேரினவாத அரசும் சிங்கள பௌத்த பேரினவாத தகவல் தொடர்புச் சாதனங்களும் மூடிமறைக்க முயற்சி செய்து வருகின்றன.

தமிழ் மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆலயங்கள் பாடசாலைகள் தேவாலயங்கள் என்பனவற்றில் தங்கள் உயிரைக்காப்பாற்றிக் கொள்வதற்காக அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

# ஈரான் பூகம்பத்தில் இறந்தோர் தொகை முப்பதாயிரத்துக்குமதிகம்; லட்சம் பேர் காயம்

(தெஹ்ரான்)

இயற்கையின் சீற்றத்தால் ஈரானில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற புவி நடுக்க அனர்த்தங்களினால் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை முப்பதினாயிரத்துக்குமேலாக அதிகரித்துள்ளதென அந்நாட்டு உத்தியோக பூர்வ செய்திகள் தெரிவித்துள்ளன.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சம் என்றும், இவர்கள் அனைவரும் சிகிச்சையின் நிமித்தம் உடனுக்குடன் தெஹ்ரான் உட்பட தூர இடங்களிலுள்ள வைத்திய மனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஆயிரக்கணக்கான சடலங்கள் சிதைவுகளுக்குள்மறைந்து போய் கிடப்பதால் மீட்புப் பணியில் பல காலதாமதங்கள் ஏற்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. இந்த மீட்புப் பணிகளை தடங்களின்றி நடத்தும் வகையில் மீட்புக் கருவிகளை உடனடியாக தந்து உதவுமாறு ஈரான் அரசு ஐரோப்பிய சமூக நாடுகளை கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

### உத்தியோகபூர்வ அறிவிப்பு

மீட்பு பணிகள் பூர்த்தியடையும் பொழுது இறந்தோர் தொகை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

இதேவேளை மீட்புப்பணிகளை தொடரும் வகையில் சடலங்களைமோப்பம்பிடித்து கண்டுபிடிக்கும் வல்லமை படைத்த நாய்கள் கப்பல் மூலம் ஈரானை நோக்கிவந்து கொண்டிருப்பதாகவும், பிரிட்டனின் தர்மஸ்தாபனமொன்று அனைத்துலக மீட்புப்படை ஒன்றை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இராட்சத விமானங்களும், ஹெலிகொப்டர்களும் இடைவிடாது இயங்கிய வண்ணம் மீட்புபணிகளிலும், நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டு வருவதுடன் இதுவரை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணமாக மூவாயிரம் தொன் உணவுப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள், கூடாரங்கள் என்பன வந்துகுவிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஈரானின் பரம வைரியான ஈராக் உட்பட எவ்வித இராஜரிக உறவும் வைத்திராத பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளும் ஈரானுக்கு உதவ முன்வந்துள்ளன. இருந்தும் இந்நாடுகளின் இந்த உதவிகளை பெறுவதா? விடுவதா? என்பது குறித்து ஈரான் அரசு முடிவு எதுவும் எடுக்கவில்லை என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இங்கு இடம்பெற்றுள்ள இந்த அனர்த்தங்களின் நிமிர்த்தம் மூன்று நாட்களுக்கான துக்கதினத்தை ஈரான் அரசு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மண்டேலாவை கொலை செய்யும் முயற்சி கண்டுபிடிக்கப்பட்டது

(கேப்டவுன்)

தென்னாபிரிக்க கறுப்பினத் தலைவர் திரு நெல்சன் மண்டேலாவை கொல்லுவதற்காக வெள்ளை இன தீவிரவாதிகளால் தீட்டப்பட்ட சதித்திட்டம் தென்னாபிரிக்க பொலிசாரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

திரு நெல்சன் மண்டேலா தமது பாரியார் திருமதி வின்னி மண்டேலா சகிதம் மேற்குலக நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு தற்பொழுது அமெரிக்காவில் தங்கியிரும்பது குறிப்பிடத்தக்கது.

திரு மண்டேலா தமது வெளிநாட்டுப் பயணங்களை முடித்துக்கொண்டு நாடு திரும்புகையில் கேப்டவுன் விமான நிலையத்தில் வைத்தே அவரைக் கொல்லுவதற்கான இந்த சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

வெள்ளை இன தீவிரவாதிகளால் தீட்டப்பட்ட இந்த சதித்திட்டம் தொடர்பாக பதினொரு பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும். விசாரணையின் பின்பு ஆறுபேர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்க - யப்பான் ஒப்பந்தம் தொடர்ந்து பேணப்படும்

(நியூயோர்க்)

அமெரிக்கா யப்பான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் நீக்கப்படமாட்டாதென்றும் அச்சட்டம் தொடர்ந்து பேணப்படும் என்றும் உறுதியளிக்கப் பட்டுள்ளது.

யப்பான் நாட்டு முப்பதாவது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷும் ஜப்பான் நாட்டு

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில அவசியம் ஏற்படும் பட்சத்தில் ஜப்பானுக்கான உதவிகள் தாராள மனதுடன் வழங்கப்படவுள்ளதாக அமெரிக்க தரப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்காவின இராணுவ நடவடிக்கைகளுக்கென மேலும் காணிகளை வழங்க ஜப்பான் முன் வந்துள்ளது. தற்பொழுது



செல்வந்த ஏழை நாடுகளுக்கிடையிலான இடைவெளி

## நீடிக்கும்வரை உலகில் அமைதி ஏற்படமாட்டாது

### மாலைதீவில் வி. பி. சிங்

(மாலே)

செல்வந்த நாடுகளுக்கும்,

சொண்டு வருவதாக அங்கு கூறிய பிரதமர் சிங் கூட்டு

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கமான 'சார்க்' ஏற்கனவே பாதுகாத்து வரும் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை இந்தியா

மக்களுக்கு எதிராக இனத்துவேஷத்தைக் கிளப்பிக் கலகத்தை மூட்டிவிட்டிருக்கிறார்கள்.

இனக்கலகம் பரவிக்கொண்டிருக்கிறது. சிங்களப் பேரினவாத அரச படைகளும் சிங்களப்பேரினவாதக் காடையர்களும் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்தும் தமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்தும் அட்டூழியம் செய்து வருகிறார்கள்.

இதே சமயம் ஒற்றுமையாக வாழும் தமிழ் முஸ்லிம் மக்களுக்குள்ளேயும் மோதலை ஏற்படுத்துவதற்கும் சிங்களப் பேரினவாத அரசு பிரசாரம் செய்து வருகிறது.

இனக்கலகம்பற்றிய செய்திகளை சிறிலங்கா சிங்களப் பேரினவாத அரசும் சிங்கள பௌத்த பேரினவாத தகவல் தொடர்புச் சாதனங்களும் மூடிமறைக்க முயற்சி செய்து வருகின்றன.

தமிழ் மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆலயங்கள் பாடசாலைகள் தேவாலயங்கள் என்பனவற்றில் தங்கள் உயிரைக்காப்பாற்றிக் கொள்வதற்காக அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் போல 1990ஆம் ஆண்டிலும் அகதிகளைக் கப்பலில் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்க ஆலோசனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வடக்கில் இப்போதுள்ள நிலையில் மூன்று மாதங்களுக்கு மட்டுமே போதுமான உணவுப் பொருள்கள்தான் கையிலிருக்கிறதாம்.

அகதிகளும் இங்கு வந்து சேர்ந்தால் இந்த உணவுப் பொருள்களும் பற்றாமல் போய் விடலாம்.

உணவில் இப்பொழுதே சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். அதே சமயம் வர்த்தகர்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்காமலும் கொள்ளை லாபம் அடிக்காமலும் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டியதும் அவசியம்.

இவற்றையெல்லாம்விட உழுந்து, பயறு, சோளம் போன்ற குறுகியகாலத்தில் பயன்பெறக்கூடிய உப உணவுச் செய்கையில் இப்பொழுதே ஈடுபடவேண்டியது மிக மிக அவசியம்.

வீட்டுத்தோட்டங்களில் மரவள்ளி போன்ற கிழங்குச் செய்கையிலும் காய்கறி உற்பத்தியிலும் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும்.

சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாதிகள் இனித் தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கூடும்.

எனவே இப்பொழுதே தமிழ் மக்கள் அந்தநெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்குத் தயாராக வேண்டும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை!

# வல்வெட்டித்துறை மீது பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைச் சந்தியில் நேற்று முன்தினம் கடற்படையினர் படகுகளில் இருந்து குடிமனைகள் மீது பீரங்கித் தாக்குதலை நடத்திய அதேநேரம் வல்லைவெளியைக் கடந்து செல்பவர்கள் மீது ஹெலிக்கொப்ரர் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியது.

நேற்றுமுன்தினம் மாலை ஐந்து மணி அளவில் வல்லைவெளிச் சந்தியில் உள்ள வீடுகள் மீதும், கட்டிடங்கள் மீதும் கடற் படையினர் படகுகளில் இருந்து பயங்கர பீரங்கித் தாக்குதலைத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு அடிக்கப்பட்ட பீரங்கிக் குண்டுகள் இரண்டு மைல் தொலைவிலுள்ள உடுப்பிட்டி வரை வந்து விழுந்துள்ளன. இக்குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் பல வீடுகளும், கட்டிடங்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதலில்பலர் காயமடைந்துள்ளனர். இவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் பணியில் சிலர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

மேலும் இத்தாக்குதல் காரணமாக பலர் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருந்தனர். இவர்களை வல்லைவெளியில் வைத்து மறுபக்கத்திற்கு செல்லவிடாமல் ஹெலியில் இருந்து இராணுவத்தினர் சுட்டுக்கொண்டிருந்தனர்.

பது குறிப்பிடத்தக்கது.

தெரிவிக்கப்பட்டது.

# அமெரிக்க - யப்பான் ஒப்பந்தம் தொடர்ந்து பேணப்படும்

(நியூயோர்க்)

அமெரிக்கா யப்பான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் நீக்கப்படமாட்டாதென்றும் அச் சட்டம் தொடர்ந்து பேணப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

யப்பான் நாட்டு முப்பதாவது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷும் ஜப்பான் நாட்டு பிரதமர் திரு. கையூவும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இந்த ஒப்பந்தம் நீடிப்புச் குறித்து உறுதியளித்துள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவசியம் ஏற்படும் பட்சத்தில் ஜப்பானுக்கான உதவிகள் தாராள மனதுடன் வழங்கப்படவுள்ளதாக அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளுக்கென மேலும் காணிகளை வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது. தற்பொழுது ஐம்பதாயிரத்துக்குமேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் ஜப்பானில் நிலைகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### பழைய எல்லை சரியென

# கிழக்கு-மேற்கு ஜேர்மனிகள் ஒப்புக் கொண்டன!

(பொன்)

தற்பொழுது கிழக்கு ஜேர்மனிக்கும், மேற்கு ஜேர்மனிக்கும் இடையில் அமைந்துள்ள எல்லை சரியானது என்று இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

இவ்விரு நாடுகளின் பாராளுமன்ற பிரதிநிதிகளாலும் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள இந்த எல்லையே இறுதியாக இரு தரப்பினராலும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதென்றும் கூறப்பட்டுள்ளது.

கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் இணைவதற்கான சர்வதேச அங்கீகாரம் பெறுவதில் இந்த எல்லை சம்பந்தப்பட்ட பிரச்சினை பெரும் தடையாக இருந்து வந்தது. இந் நிலையில் இவ்விரு நாடுகளும் நட்புறவின் அடிப்படையில் இந்த எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வந்துள்ளமையின் நிமித்தம் இதுவரை காலமும் சர்வதேச அங்கீகாரத்துக்கு தடையாக இருந்த ஒரு முக்கியப் பிரச்சினை தீர்ந்து விட்டதாக அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

இந்த எல்லைப் பிரச்சினை சம்பந்தமான ஒப்புதலுக்கு கிழக்கு ஜேர்மனி பாராளுமன்றத்தில் அமோக ஆதரவு அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு ஜேர்மனியின் பொருளாதாரத்தை மேற்கு ஜேர்மனியுடன் இணைப்பதற்கான முயற்சிகள் அண்மை காலமாக மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுகுறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்குமிடையிலான இந்த பொருளாதார இணைப்புநடவடிக்கைஅடுத்த மாதம் முதலாம் திகதி அமுல்படுத்தப்பட உள்ளதாக இரு தரப்பினரும் அறிவித்துள்ளனர்.

இது சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று கிழக்கு ஜேர்மனி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### இந்திய - பாகிஸ்தான் உறவு குறித்து


# மத்திய கிழக்கு நாடுகளுடன் விரிவான பேச்சுக்கள்

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகள் குறித்தும், இரு நாடுகளுக்குமிடையிலான அண்மைக் கால நடவடிக்கைகள் குறித்தும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஒரு விரிவான தெளிவினை ஏற்படுத்தும் முயற்சி ஒன்றினை இந்தியா மேற்கொண்டுள்ளது.

இந்த முயற்சியினை நடைமுறைப்படுத்தும்வகையில் இந்தியாவின் மத்திய உள்துறை அமைச்சரான ஜனாப் முக்தி மொகமட்சயித் பன்னிரெண்டு நாள் உத்தியோக பூர்வபயணமொன்றினை மேற்கொண்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ள அமைச்சர் மொகமட் சயித் முதலாவதாக டுனீசியா நாட்டுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளதுடன் அந்நாட்டு வெளியுறவு அமைச்சரான இஸ்மாயில் காலீத்துடன் விரிவான பேச்சு வார்த்தைகளையும் நடத்தியுள்ளார்.

இந்த பேச்சு வார்த்தைகளின் போது இரு தரப்பு பிராந்திய, சர்வதேச பிரச்சினைகள் விரிவாக ஆராயப்பட்டதுடன் அந்நாட்டு அதிபருக்கு பிரதமர் வி. பி. சிங் கொடுத்தனுப்பிய கடிதமும் கையளிக்கப் பட்டதாக அறிவிக்கப் பட்டது.



### செல்வந்த ஏழை நாடுகளுக்கிடையிலான இடைவெளி

# நீடிக்கும்வரை உலகில் அமைதி ஏற்படமாட்டாது

### மாலைதீவில் வி. பி. சிங்

(மாலே)

செல்வந்த நாடுகளுக்கும், ஏழைநாடுகளுக்கும் இடையிலான இடைவெளி மேலும் விரிவடைந்து வரும் போக்கு நிலவும் வரை உலகில் நிரந்தரமானதும், நீடித்ததுமான அமைதியையும், சமாதானத்தையும் எதிர்பார்க்க முடியாது என்று இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் வருத்தம் தெரிவித்துள்ளார்.

மாலைதீவின் சுதந்திர வெள்ளிவிழாவில் கலந்து கொள்ளும் வகையில் மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு அங்கு சென்றுள்ள பிரதமர் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவமொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்ட வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

தமது அண்டை நாடுகளுடனான உறவை நல்ல நிலையில் அமைத்துக் கொள்ளும் வகையில் அதற்கு சாதகமான முறையில் ஊக்கமும், உத்வேகமும் அளிக்கக் கூடிய பல நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாக அங்கு கூறிய பிரதமர் சிங் கூட்டுசேரா நாடுகளின் இயக்க கொள்கைகளை தொடர்ந்து தாம் கையாண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கமான 'சார்க்' ஏற்கனவே பாதுகாத்து வரும் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை இந்தியாவும்-மாலைதீவும் கூட்டாக ஆதரிக்க வேண்டும் என்றும் அவர் அங்கு கூறினார்.

### சிறிலங்கா இராணுவத்தினர்

# தம்மைவிரட்டியடித்து விட்டதாக தமிழ் அகதிகள் தகவல்

(சென்னை)

சிறிலங்கா அரசபடையினர் அப்பாவி தமிழ் மக்களை கொன்று குவித்து வருவதுடன் வீடுகளையும் தீயிட்டுக் கொழுத்தியதுடன் தம்மையும் விரட்டியடித்து விட்டதாக இராமேஸ்வரம் சென்றடைந்துள்ள தமிழ் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

செய்தியாளர்களிடம் மேற்படி தகவலை வெளியிட்டுள்ள அகதிகள் தமிழர் பிரதேசங்களில் கடுமையான உணவு தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# பௌசரில் நீர் விநியோகம்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறையில் தங்கியிருக்கும் குருநகர் அகதிகளின் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக யாழ். மாநகரசபையினர் பெரிய பௌசரில் நீர் கொண்டுவந்து எல்லா அகதிமுகாம்களுக்கும் இன்று விநியோகித்தனர். (43)

# உலகக் கிண்ணம் இனி நடைபெறும் ஆட்டங்கள்

ஜூன் 24. ஆட்டம் 'C' - பிரேசில் - ஆர்ஜென்டீனா
ஆட்டம் 'D' - மே. ஜேர்மனி - ஒல்லாந்து
ஜூன் 25. ஆட்டம் 'E' - அயர்லாந்து - றோமானியா
ஆட்டம் 'F' - இத்தாலி - உருகுவே
ஜூன் 26. ஆட்டம் 'G' - ஸ்பானியா - யூகோஸ்லாவியா
ஆட்டம் 'H' - இங்கிலாந்து - பெல்ஜியம்

கால் இறுதியாட்டம்:

ஜூன் 30 (அ) வெல்பவர் ஆட்டம் C - வெல்பவர் ஆட்டம் G
(ஆ) வெல்பவர் ஆட்டம் E - வெல்பவர் ஆட்டம் F
ஜூலை 1. (இ) வெல்பவர் ஆட்டம் B - வெல்பவர் ஆட்டம் D
(ஈ) வெல்பவர் ஆட்டம் A – வெல்பவர் ஆட்டம் H

அரை இறுதியாட்டம்:

ஜூலை 3 வெல்பவர் ஆட்டம் 'அ' ஆட்டம் 'ஆ'
ஜூலை 4 வெல்பவர் ஆட்டம் 'இ' - ஆட்டம் 'ஈ'

இறுதியாட்டம்:

ஜூலை 8

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

## கடற்படைப் பீரங்கி குடியெழுப்பிய குடும்பங்கள்

(விசேட நிருபர்)

வலிகாமம் தெற்குப் பகுதியில் இருந்து ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து வெவ்வேறு பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளன.

காங்கேசன்துறை,கீரிமலை, மாதகல் கடற்பிராந்தியங்களில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா கடற்படை பீரங்கிப் படகுகளால் கரையோரப் பகுதிகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதல் நடத்துவதால் மக்கள் அகதிகளாக வெளியேறி கோயில்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கீரிமலை, வலித்தூண்டல் பகுதிகளில் இருந்து வெளியேறிய 103 குடும்பங்கள் மாரீசங்கூடல் யூதாததேயு ஆலயத்திலும் 49 குடும்பங்கள் கயித்தார் ஆலயத்திலும் 47 குடும்பங்கள் போயிட்டிலூர்த்துமாதா ஆலயத்திலும் மீதி 23 குடும்பங்கள் தனியார், உறவினர், வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

மேலும் நாவாந்துறைபகுதி அகதிகள் மானிப்பாய் அர்ச் அந்தோனியார் ஆலயத்தில் 21 குடும்பங்களும், நவாலி சென் பீற்றர்ஸ் ஆலயத்தில் 75 குடும்பங்களும், ஆனைக்கோட்டை அடைக்கலமாதா ஆலயத்தில் 130 குடும்பங்களும் தங்கியுள்ளனர்.

இவை தவிர இளவாலை சென் ஜேம்ஸ், நீற்றம்மா ஆலயங்கள் சேந்தான்குளம் ஆலயத்திலுமாக மேலும் 600 குடும்பங்களும்சில்லாலை யாகப்பர் ஆலயத்தில் 15 குடும்பங்களும் தஞ்சமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அகதிகள் தங்கியுள்ள இடங்களுக்கு விஜயம்மேற்கொண்ட யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தினர் உடனடி நிவாரணம், முதலுதவி என்பவற்றை வழங்கினர். (21)

# “இராணுவ அடக்குமுறையைப் பிரயோகித்தால் தமிழ் மக்கள் பணிந்து விடமாட்டார்கள்”

(யாழ்ப்பாணம்)

இராணுவ அடக்கு முறைகளைப் பிரயோகிப்பதனாலோ நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதனாலோ பழிவாங்கும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதனாலோ தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைக்கான போராட்டத்தைக் கைவிட்டுவிடமாட்டார்கள் என்பதை அரசு கவனத்திற்கு எடுக்க வேண்டுமென ஈழவர் ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை இலங்கை அரசிற்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி முதல் தொடர்ந்துவரும் யுத்தமானது இன்னமும் ஓய்ந்துவிடவில்லை. 16ஆம் திகதியன்று போர் நிறுத்த உடன் பாடொன்று எட்டப் பட்டதாக அரசும் - தமிழீழ விடுதலைப்புலிகளும்செய்திஅறிக்கைகள்மூலம் தெரிவித்திருந்தனராயினும், நடைமுறையில் யுத்தம் ஓயவில்லை. மீண்டும் 18ஆம்திகதி முதல் முழு அளவிலான போர் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக அரசு பிரகடனப் படுத்தி உள்ளது.

இந்த யுத்த நிலைமையைப் பிரகடனப்படுத்தியஅரசானது இந்த யுத்தம் மக்களுக்கு எதிரானது அல்ல என்றும் சட்டம் ஒழுங்கைச்சீரழிப்பவர்களுக்கு எதிராகவே படையினர் யுத்தம் புரிவதாசக் கூறுகின்றது. கடந்த சுமார் ஒன்றரை வருடகாலமாக தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்று அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தமிழ் பேசும் மக்களின் அடிப்படைஅபிலாஷைகளுக்கு அரசியல் தீர்வு காணப்போவதாகக் கூறிவந்த அரசு திடீரென யுத்தசன்னதம்பூண்டிருப்பது எம்மை அதிர்ச்சி அடையச்செய்வதாகவுள்ளது.

சண்டை தொடங்கிய சில நாட்களிலேயே பல அப்பாவி மக்கள் கொல்லப் பட்டும் உடமைகள் அழிக்கப்பட்டும் வருகின்றது என்பதற்கு ஏறாவூர் செங்கலடி, கல்முனை, திருக்கோணமலை மற்றும் பகுதிகளில் இருந்து வரும் செய்திகள் சாட்சியம் கூறுகின்றன. போக்கு வரத்துச்சேவை சீர்குலைந்து அப்பாவிப் பொது மக்கள்மருத்துவச்சேவைக்கும், உணவுப் பொருட்களுக்கும் அன்றாடம் அல்லற்பட வேண்டிய அவல நிலை தோன்றி இருக்கின்றது.

கடந்த பதினாறாம் திகதி அறிவிக்கப்பட்டபோர்நிறுத்தமானது பின்பற்றப்படவில்லை அரசபடையினரின் நடவடிக்கைகள் தான் போர் நிறுத்தம் முடிவடைந்துபோனமைக்குக் காரணமாக இருந்திருக்கின்றது என்பதை அடுத்த சில நாட்களில் மூர்க்கத்தனமான தாக்குதல் ஆரம்பித்ததிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகின்றது.

எனவே இன்று ஏற்பட்டிருக்கும் யுத்த நெருக்கடியை அரசாங்கமானது வெறுமனே சட்டம், ஒழுங்கைப் பேணி ஜனநாயகத்தை நிலைநாட்டி நடக்கும் யுத்தம்என்று கருதிச் செயற்படுவதை விடுத்து, இப்பிரச்சினையில் ஒரு தேசிய இனப்பிரச்சினையின் நியாயமும்-வளர்ச்சியும் மேலோங்கியிருப்பதைக் கவனத்தில் எடுக்கவேண்டும்.

தமிழ் பேசும்மக்கள் மீதான இராணுவ அடக்குமுறை நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன் உடன் நிறுத்தாவிடின் எமது நிலைகளை மீளாய்வு செய்ய வேண்டி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாவட்ட சாரணர்களை பதிவு செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களில் சேவையாற்றவென யாழ். மாவட்ட திரிசாரணர்களையும், ஜனாதிபதி சாரணர்களையும் உடன் யாழ். மாவட்ட அலுவலகத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

இம்முகாம்களில் சேவையாற்ற விரும்பும் சாரணர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்வதுடன் தமது சேவை விபரத்தையும் பெற்றுச்செல்லுமாறு யாழ். மாவட்ட சாரணர் பயிற்சி ஆணையாளர் திரு. நா. நல்லையா வேண்டிக்கொள்கிறார். (அ)

## கடற்படைத் தாக்குதலால் இடம்பெயர்ந்த குடும்பங்கள்

(விசேட நிருபர்)

காரைநகர், ஊர்காவற்றுறை, நாரந்தனை, கரம்பொன் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சாட்டி மாதா கோயில், வெள்ளை மணற் கடற்கரைப் பள்ளிவாசல் ஆகியவற்றில் தஞ்சம் புகுந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கைகளும், இடங்களும்:

காரைநகர் தெற்கு 600 குடும்பங்கள், காரைநகர் தென்கிழக்கு500குடும்பங்கள், காரைநகர் கிழக்கு 300 குடும்பங்கள், நாரந்தனை வடமேற்கு 300 குடும்பங்கள், நாரந்தனை வடக்கு 100குடும்பங்கள், கரம்பொன் மேற்கு 350 குடும்பங்கள், கரம்பொன் கிழக்கு 200 குடும்பங்கள், பருத்தியடைப்பு 350 குடும்பங்கள் ஊர்காவற்றுறை 410குடும்பங்கள், கரம்பொன் 300 குடும்பங்கள்.

தீவுப்பகுதி தேவாலய பங்குத் தந்தைமார்களின் உதவியுடன் நிவாரண ஒழுங்குகளை யாழ் மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. எம். ஈ. பயஸ் அடிகளார் செய்துவருகிறார். (24)

## அகதி முகாம்களில் சுகாதார வசதிகளைப்பேண நடவடிக்கை

யாழ் நகரத்தில் தற்பொழுது உருவாகிவரும் அகதி முகாம்களில் சுகாதார சேவைகள்,வசதிகள் பேணப்படுவது குறித்து அவசர கூட்டமொன்று வெள்ளிக்கிழமை (22.06.90) மாநகர சபை ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார மேற் பார்வையாளர்கள் உள்ளிட்ட ஏனைய

## கல்விக் கிணைக்கள்

## நாடு பிரியும்வரை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்னை பூபதி கலையரங்கத் திறப்புவிழா வைபவத்தில் பேசும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது;

இரு தேசங்கள் இருக்கின்றன. இரண்டிற்கும் இடையில்தான் போராட்டம். அரசாங்கம் பாதுகாப்பு நிதியென்றும், வேறு நிதிகளென்றும் எந்தப் பெயரிலெல்லாம் நிதி சேகரிக்கின்றது. இந்த நிதி தமிழருக்கு எதிரான போராட்ட நிதியாகும்.

இந்தியர்கள் காந்தியைப் பற்றிப்பேசிக்கொண்டு எம்மை அழிக்க வந்தார்கள். இன்று புத்தரைச் சொல்லி எம்மை அழிக்கப் பார்க்கிறார்கள். இவர்களைநாம் நம்பவில்லை.

## கொழும்பில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பு, திருக்கோணமலையிலிருந்தும் பெற்றோர் கொழும்புக்குச் சென்று தமது பிள்ளைகளைப் பற்றி தகவல் அறியமுடியாத நிலையில் உள்ளனர். பெற்றோர் கொழும்புடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் காணாமல் போனவர்கள் அல்லது இறந்த இளைஞர்களின் தொகை மேலும் அதிகரித்ததாக இருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

## உலக உதவி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றார்கள், எரிக்கப்படு

## வயோதிபர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுச் சாந்தக்காரர் அன்று மாலை வந்து பார்த்த பொழுது இரத்த வெள்ளத்தில் சடலம் கிடக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு கொல்லப்பட்டவர் சேவியர் அருள்ராஜ் பெர்னான்டோ (வயது 61) என்று அடையாளம் காணப்பட்டது.

அவர் தங்கி இருந்த வீட்டுக்கு வெளியேயும் இரத்த வெள்ளம் காணப்பட்டது. சுவர், கதவுகளிலும் இரத்தக் கறைகள் இருந்தன.

சடலத்தை எரிப்பதற்கு முனைந்ததன் அறிகுறியாக சாறம் அரைகுறையாக எரிந்து கிடந்தது. (21)

## காங்கேசனில் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

காங்கேசன்துறை அரச களஞ்சியத்தில் அரிசி இருப்பில் இருந்தும் அங்கு சென்று அதனை எடுத்துவர முடியாதவாறு வானத்திலிருந்தும் கடலிலிருந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. ஆகவே இந்த அரிசியை கூட்டுறவுச்சங்கங்களுக்கு எடுத்து வழங்க வழி செய்யவும்.

மா கப்பல் நீண்டநாட்களாக கடலில் வந்து நிற்பதாகக் கூறப்படுகிறது. கப்பலில் வந்த மாவை இறக்க உரிய ஒழுங்கு முறைகளை மிகஅவசரமாக செய்யுமாறும் வேண்டுகின்றோம்.

கூட்டுறவுமொத்தவிற்பனை நிலையத்தில் சீனி, பருப்பு, பால்மா வகைகளைப் பெற்

## தேவாலயமும் சேதம்

(விசேட நிருபர்)

காரைநகர் ஸ்ரீலங்கா கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு ஊர்காவற்றுறைப் புனித சந்தியோமையோர் ஆலயம் கடும் சேதமடைந்துள்ளது.

சுருவில் வீதி, தேவமாதா கோயில் குருமனையைத் தாக்கிய பீரங்கிக் குண்டுக்குப் பங்குத் தந்தை வண. சாமிநாதன் கிருபானந்தன் மயிரிழையில் உயிர் தப்பினார்.

## இலங்கைத்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ழகத்தில் வந்து தங்கியுள்ள தமிழ் போராளிகளை வெளியேற்றுவது குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் பின்பே முடிவு எடுக்கப்படும் என்றும் கூறினார்.

தமிழக கடற்பகுதி பாதுகாப்பு குறித்து கருத்து வெளியிட்ட திரு கருணாநிதி சென்னையில் மாநில அரசின் தலைமைச்செயலர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களைக் கொண்டு முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## அதிர்ச்சியால்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொப்ரர் சூட்டின் போது வீதியோரத்தில் நடந்து சென்ற வியாபாரி ஒருவர் வீதி ஓரமாக மயங்கி விழுந்து இறந்துவிட்டார்.

இந்த வியாபாரியின் பையில் காணப்பட்ட அடையாள அட்டையிலிருந்து இவரது பெயர் குமாரசுவாமி துரைராசா என்றும் இவருக்கு 49 வயதிருக்கும் என்றும் தெரிய வருகிறது. அடையாள அட்டையைப் பெறும்போது இவர் வலஸ்முல்லையில் வசித்திருக்கிறார் என்றும் அறிய வருகிறது. 75)

கிறோம். கூட்டுறவுச்சங்க லொறிகளை ஓட்டுவதற்கு டீசல்பெறமுடியாமல்உள்ளது. மண்ணெண்ணெயும் கிடைப்பதில்லை. ஆகவே மேற்குறிப்பிட்ட அத்தியாவசியப் பொருட்களை மக்களுக்கு வழங்க எமக்கு வசதி செய்துதருமாறு

பொன் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து சாட்டி மாதா கோவில், வெள்ளை மனம் கடற்கரைப் பள்ளி வாசல் ஆகியவற்றில் தஞ்சம் புகுந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கைகளும், இடங்களும்:

காரைநகர் தெற்கு 600 குடும்பங்கள், காரைநகர் தென்கிழக்கு500குடும்பங்கள், காரைநகர் கிழக்கு 300 குடும்பங்கள், நாரந்தனை வட மேற்கு 300 குடும்பங்கள், நாரந்தனை வடக்கு 100குடும்பங்கள், கரம்பொன் மேற்கு 350 குடும்பங்கள், கரம்பொன் கிழக்கு 200 குடும்பங்கள், பருத்தியடைப்பு 350 குடும்பங்கள்

தீவுப்பகுதி தேவாலய பங்குத் தந்தைமார்களின் உதவியுடன் நிவாரண ஒழுங்குகளை யாழ் மறைமாவட்ட மனிதமுன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. எம். ஈ. பயஸ் அடிகளார் செய்துவருகிறார். (24)

கும் சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்று அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தமிழ் பேசும் மக்களின் அடிப்படைஅபிலாஷைகளுக்கு அரசியல் தீர்வு காணப் போவதாகக் கூறிவந்த அரசு திடீரென யுத்தசன்னதம்பூண்

அன்னை பூபதி கலையரங்கத் திறப்புவிழா வைபவத்தில் பேசும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது;

இரு தேசங்கள் இருக்கின்றன. இரண்டிற்கும் இடையில்தான் போராட்டம். அரசாங்கம் பாதுகாப்பு நிதியென்றும், வேறு நிதிகளென்றும் எந்தப் பெயரிலெல்லாம் நிதி சேகரிக்கின்றது. இந்த நிதி தமிழருக்கு எதிரான போராட்ட நிதியாகும்.

இந்தியர்கள் காந்தியைப் பற்றிப்பேசிக்கொண்டு எம்மை அழிக்க வந்தார்கள். இன்று புத்தரைச் சொல்லி எம்மை அழிக்கப் பார்க்கிறார்கள். இவர்களைநாம் நம்பவில்லை.

பிரேமதாஸா எந்த மக்கள் மத்தியிலிருந்து ஜனாதிபதியாக வந்தாரோ, அந்த மக்கள், ஜனாதிபதியாக வர உதவிய ஜே. வி. பியினர் அழிக்கப்பட்டார்கள். முற்றிலும் எதிர்த்த முதலாளிகள் இருக்கிறார்கள்.

யோகி தொடர்ந்து பேசுகையில், "நாங்கள் இராணுவத்துடன் மட்டும் போராடுகிறோம். அவர்கள் காடையர்களைக் கொண்டு எம்மக்களுடன் போராடுகிறார்கள், பூரண விடுதலை வர விரும்புகிறோம். அது அமைதியாக வரும் என்று நினைத்தோம். அதுநடக்கவில்லை" என்றார்.

# அகதி முகாம்களில் சுகாதார வசதிகளைப்பேண நடவடிக்கை

யாழ் நகரத்தில் தற்பொழுது உருவாகிவரும் அகதி முகாம்களில் சுகாதார சேவைகள்,வசதிகள் பேணப்படுவது குறித்து அவசர கூட்டமொன்று வெள்ளிக்கிழமை (22.06.90) மாநகர சபை ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார மேற் பார்வையாளர்கள் உள்ளிட்ட ஏனைய சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள். நகரத்தில் ஆங்காங்கே உருவாகும் அகதிமுகாம்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்கும் அவ்வாறு அமைக்கப்படும்அகதிமுகாம்களில்அவசிய சுகாதார சேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குமான கருமபீட மொன்றை மாநகரசபை அலுவலகத்தில் உடனடியாக அமைப்பதென தீர்மானிக்கப் பட்டது. இக் கரும பீடம் விடுமுறை தினங்கள் உட்பட்ட எல்லா நாட்களிலும் பிற்பகல் இரண்டுமணி வரை செயற்படும்.

## கல்வித் திணைக்களம் செயற்பாடுகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று தோன்றியுள்ள நெருக்கடி நிலைமைகளைக் கருத்திற் கொண்டு யாழ். கல்வித்திணைக்களம் பாடசாலைகளின் செயற்பாடு பற்றி சில அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது. அவ் அறிவுறுத்தலில்

21. 06. 90 அன்று சகல கல்விக் கோட்டங்களுக்கும் பொறுப்பாகவுள்ள உதவிக் கல்விப்பணிப்பாளர்களை பாடசாலையை மூடுதல் அல்லது பதில் பாடசாலையை வைத்தல் தொடர்பாக மாணவர்கள் ஆசிரியர்களின் உயிர் பாதுகாப்பை நிர்ணயிப்பது தொடர்பாகவும் சகல அதிபர்களுடனும் கலந்து ஆலோசித்து மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளை கல்விப்பணிப்பாளருக்கு தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

வாகனப் போக்குவரத்து சீர் இன்மையால் தூர இடத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் சேவையாற்றும் ஆசிரியர்கள் தமக்கு அருகாமையிலுள்ள கோட்டத்தில் அனுமதி பெற்று பாடசாலையில் சேவையாற்ற வேண்டும்.

பிள்ளைகள் வராமையால் சில வேளைகளில் பூட்டப்படும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் உடைமைகளை அதிபர் மாணவர்கள் ஆசிரியர்கள் பழையமாணவர்கள் நலன் விரும்பிகள் களவுகளில் இருந்து பாதுகாக்கவேண்டும்.

சில பாடசாலைகள் அகதி முகாம்களாக மாற்றப்பட்டு இருக்கும் வேளைகளில் அதிபர்கள் அப்பாடசாலைக்குரிய தளபாடங்களை பாதுகாப்பான இடத்தில் வைத்துப் பாதுகாக்க வேண்டும், சில பாடசாலைகளில் தளபாடங்கள் விளக்கமின்மையால் விறகாகப் பாவிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு வசதியளிக்கும் முகமாக யாழ். கல்வித் திணைக்களத்தில் சென்ற வாரம் தொடக்கம் வரவு பதிவுகள் பேணப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணம் வர முடியாதவர்கள் தாம் இருக்கும் கோட்டத்திலும் கைச்சாத்திட வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் கொடுப்பனவுக்கான பணம் இதுவரை திருமலை வட-கிழக்கு கல்வி அமைச்சில் இருந்து பெறப்படாமை யால் சகல ஆசிரியர்களுக்கும் தலா 1000- ரூபா வழங்கும் ஒழுங்கை கல்வித் திணைக்களம் செய்துள்ளது. இக் கொடுப்பனவு குறிப்பிட்ட கோட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஆசிரியர்கள் தங்கள் கோட்டங்களில் இப்பணத்தை செவ்வாய், புதன் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலைகளை தொடர்ந்து நடத்தக் கூடிய சாத்தியங்கள் இல்லாத பட்சத்தில் அப்பாடசாலைகளை மூடி சுமுக நிலை ஏற்பட்ட பின்னர் பாடசாலைகளைத் திறந்து இழந்த நாட்களை லீவு நாட்களில் ஈடுசெய்து மாணவர்களின் கல்வியை மேம்படுத்த குறிப்பிட்ட அதிபர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் அனுமதியுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### யுத்தத்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரங்கில் கலந்து பேசிய விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி யாழ்-மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

கலை, கலாசார பிரிவு பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

மங்கள விளக்குகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் திரு. யோகரெத்தினம் யோகி யாழ்-மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் திரு. தங்கவேலாயுதம் (தேவர்) விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட மகளிர் முன்னணி பொறுப்பாளர் மாலினி, மகளிர் முன்னணி யாழ். கலை கலாசாரப் பொறுப்பாளர் சீத்தா ஆகியோரும் கருத்துரை கூறினர்.

விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் (பேபி) அன்னை பூபதியின் திருவுருவப் படத்தையும் திரைநீக்கம்செய்துவைத்தார்.

செல்வி றம்மியா நன்றி தெரிவித்தார். (21)

### வடக்கு-கிழக்கு--

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

தொகை தெரியவில்லை யென்றும்வடக்குடன் கொழும்புக்கு தொடர்புகள்யாவும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும்அரசஅதிகாரியொருவர் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

### மக்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் போது குறிப்பிட்டார்;

#### இனத்துக்காக கலையரங்கம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) தொடர்ந்து பேசுகையில் "இந்தக் கலைக்கூடம் எமது போராட்டத்துக்காக, எமது இனத்துக்காக அமைக்கப்பட்டதாகும்.

யுத்த சூழ்நிலையில் அமைக்கப்படும் கலையரங்கம் நிரந்தரமானதா என்று நினைக்கக் கூடும். அழிக்கப்படலாம்; குண்டு வீசப்படலாம். ஆனால் கலையரங்கம் இயங்கிக் கொண்டே இருக்கும். மண்ணில் வாழும் மக்களுக்கு இந்தப் பொறுப்புண்டு" என்றார்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பு, திருக்கோணமலையிலிருந்தும் பெற்றோர் கொழும்புக்குச் சென்று தமது பிள்ளைகளைப் பற்றி தகவல் அறியமுடியாத நிலையில் உள்ளனர். பெற்றோர் கொழும்புடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் காணாமல் போனவர்கள் அல்லது இறந்த இளைஞர்களின் தொகை மேலும் அதிகரித்ததாக இருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

### உலக உதவி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றார்கள், எரிக்கப்படுகின்றார்கள்.

தமிழீழத்தின் எப்பகுதிக்கும் இதுவரை உணவுப் பொருட்களோ, எரி பொருட்களோ, மருந்துவகைகளோ அனுப்பப்படவில்லை. அவற்றை எடுக்கச்சென்றவர்களும் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழீழ சிறிலங்காப் போராட்டம் தொடங்கியதில் இருந்து தமிழீழத்தில் உள்ள மருத்துவமனைகள் எதுவும் சரியாக இயங்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் சிகிச்சைபெறக் கூடிய வகையில் எந்த மருத்துவமனையும் இயங்கவில்லை.

இதனால் காயமடைந்தவர்களில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்துள்ளனர்.

வடமாகாணத்தில் ஒரு சில சிறுமருத்துவமனைகள்மட்டும் மிகுந்த சிரமத்திற்கிடையில் இயங்குகின்றன.

தமிழீழத்தில் யாழ். மாவட்டத்தில் இருக்கும் போதனா வைத்தியசாலை மீது சிங்களப்படை எறிகணை (ஷெல்) தாக்குதல்களை நடத்தியதில் இருந்து அந்த வைத்தியசாலை இயங்கவில்லை.

தமிழீழத்தில் எந்த மருத்துவமனையிலும் ஊடுகதிர் நிழற்பட (X Ray) கருவிகள் இயங்கவில்லை. இருக்கும் ஒரு சிலவும் பழுதடைந்துள்ளன.

இங்கும் போதிய மருந்து வகைகளும் கிடையாது.

உலக நாடுகளும் மனித நல அமைப்புகளும் உடனடியாக தமிழீழ மக்களுக்கு நேரடியாக உதவ முன்வரவேண்டும்.

சிங்கள அரசுக்கு செய்யப்படும் உதவிகள் தமிழீழ மக்களுக்கு கிடைக்காது என்பதால் நேரடியாக தமிழீழமக்களுக்கு உதவ முன்வரவேண்டும்.

### மூன்றாம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் நிலைகளில் இருந்து வாபஸ் வாங்காமல் தொடர்ந்து ஸ்ரீலங்கா இராணுவத்தின் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்,

(1ஆம் பக்க தொடர்ச்சி)

காங்கேசன்துறை அரச களஞ்சியத்தில் அரிசி இருப்பில் இருந்தும் அங்கு சென்று அதனை எடுத்துவர முடியாதவாறு வானத்திலிருந்தும் கடலிலிருந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. ஆகவே இந்த அரிசியை கூட்டுறவுச்சங்கங்களுக்கு எடுத்து வழங்க வழி செய்யவும்.

மா கப்பல் நீண்டநாட்களாக கடலில் வந்து நிற்பதாகக் கூறப்படுகிறது. கப்பலில் வந்த மாவை இறக்க உரிய ஒழுங்கு முறைகளை மிகஅவசரமாக செய்யுமாறும் வேண்டுகின்றோம்.

கூட்டுறவுமொத்தவிற்பனை நிலையத்தில் சீனி, பருப்பு, பால்மா வகைகளைப் பெற்றுத்தருமாறும் கேட்டுக்கொள்கிறோம். கூட்டுறவுச்சங்கலொறிகளை ஓட்டுவதற்கு டீசல்பெறமுடியாமல்உள்ளது. மண்ணெண்ணெயும் கிடைப்பதில்லை. ஆகவே மேற்குறிப்பிட்ட அத்தியாவசியப் பொருட்களை மக்களுக்கு வழங்க எமக்கு வசதி செய்துதருமாறு கோருகிறோம்". (75)

சென்ற வியாபாரி ஒருவர் வீதி ஓரமாக மயங்கி விழுந்து இறந்துவிட்டார்.

இந்தவியாபாரியின் பையில் காணப்பட்ட அடையாள அட்டையிலிருந்து இவரது பெயர் குமாரசுவாமி துரைராசா என்றும் இவருக்கு 49 வயதிருக்கும் என்றும் தெரிய வருகிறது. அடையாள அட்டையைப் பெறும்போது இவர் வலஸ்முல்லையில் வசித்திருக்கிறார் என்றும் அறிய வருகிறது. 75)

### ஒன்பது நாள் போரில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றிப் பன்னிரெண்டு பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், நூற்றி எழுபத்தெட்டுப் பேர் காயமடைந்ததாகவும், நூற்றி ஐம்பத்தெட்டுப் பொலிசார் கொல்லப்பட்டுள்ளதாகவும் இராணுவ உயர் அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட ஐநூறு பொலிசாரின் கதி என்னவென்று தெரியவில்லை என்றும். இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே அவர்களது நிலைபற்றி உறுதிப்படுத்த முடியுமென்றும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார்.


## தேனீக்களின் பொதுக்கூட்டம்

திங்கள் (25. 6. 90) காலை 9 மணிக்கு தேனீக்கள் அனைவருக்குமான பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது. சகல தேனீக்களும் அதன் பராமரிப்பாளர்களும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

"தேனீக்கள்"
யூனிவேர்சல் சமூக சேவைப் பிரிவு
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

B/1195

## இடம்மாற்ற அறிவித்தல்

(ஷப்றா)

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் (லிமிட்டெட்)
ஸ்தாபனம்
292/2, நாவலர் வீதியில் உள்ள
உதயன் பணிமனைக்கு
(கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அருகாமை)
25. 06. 1990 முதல் தற்காலிகமாக இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
காலை 9. 00 மணிதொடக்கம் பிற்பகல் 3, 30 மணிவரை அலுவல்கள் நடைபெறும்.

- நிர்வாகத்தினர்

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்;
யாழ்ப்பாணம்.
(B-1194)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.